**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 96/21**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. **மோகன்** | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **05.09.2023.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அறந்தாங்கி எழில் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 19.03.2019ம் தேதி அறந்தாங்கி வட்ட கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தபோது கும்மங்காடு வட்ட பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றியபோது தேர்தல் சம்பந்தமாக ரோந்து சென்றபோது எல்.என்.புரம் அருகே ஒரு டீ கடையில் எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்த சிவசாமி மகன் முருகன் என்பவர் கஞ்சா விற்பதற்காக தகவல் வந்தது. அப்போது தகவலை பெற்றுக்கொண்டு காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தேன். மேற்படி நபரை காவல் துறையினர் அடையாள காட்ட சொல்லி கேட்டுக்கொண்டதன் பேரில் அவரை நான் நேரில் சென்று அடையாளம் காட்டினேன். அவரை காவல்துறையினர் கைது செய்தனர். அவர் வீட்டு முன்பு ஒரு வேலிகருவை ஒரு மரத்தடி அருகே மறைத்து வைத்திருந்ததை எடுத்துக்கொடுத்தார். உடனே போலீசார் அதனை சோதனை செய்தபோது அதில் கஞ்சா என உறுதி செய்யப்பட்டது. எனக்கு முன்பும் எனது உதவியாளர் சரவணன் முன்பு போலீசார் எதிரியை கைது செய்து அழைத்து சென்றனர். ஆஜர் எதிரி தான். எங்கள் முன்பு வழக்கு பதிவு செய்து கஞ்சாவை கட்டி சுமார் 5 கிகி இருந்தது. மேற்படி எதிரியை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். அதில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். பொருளை தராசில் எடை போட்டு பார்த்து மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். நான் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகவும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆகவும், எதிரியிடம் மகஜரில் கைப்பற்றப்பட்ட மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் புகார் கொடுத்தற்கு காவல் நிலையத்திலிருந்து முதல் தகவல் அறிக்கை நகல் தரவில்லை. நானும் கேட்டு வாங்கவில்லை. நான் புகார் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தேன். சார்பு ஆய்வாளர் என்னிடம் விசாரணை வாக்குமூலம் வாங்கினார். நான் சொல்வது பொய் என்றும் சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுக்கவில்லை என்றும் அவரிடம் என்னிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் டீ கடையில் எதிரி கஞ்சா விற்பதாக பேசிக்கொண்டது சம்பந்தமாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் கொடுத்த புகாரில் தகவலை எவ்வாறு பெற்றுக்கொண்டேன் யாரிடம் பெற்று கொண்டேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த வழக்கிற்கு முன்பாக எதிரியை தெரியாது. எதிரியை எனக்கு யார் அடையாளப்படுத்தினார்கள் என்று,புகாரிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும் எதிரியை போய் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம காட்டப்படும் மாதிரி பொட்டலங்கள் இரண்டில் உள்ள என் கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து 8.30 மணிக்கு கொடுத்தேன். பொட்டலங்களில் சட்டப்பிரிவு, கு.எண். என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொட்டலங்களில் தனிப்பட்ட பெயர்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பெரிய சாக்குபையில் இருந்து மாதிரிகள் காவல் நிலையத்தில் இருந்து எடுக்கப்பட்டது. நான் கொடுத்த புகாரில் எனக்கு தகவல் கிடைத்த நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு அதன் பிறகு தான் எதிரி வீட்டிற்கு சென்றோம். இந்த விபரத்தையோ புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் எனது உதவியாளரும் சரவணன் என்பவரும் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் டீக்கடையிலிருந்து காவல் நிலையம் சென்று சம்பவ இடம் சென்று காவல் நிலையம் சென்றவரை ஒரே வாகனத்தில் சென்றோம். போலீசார் ஜீப்பில் வந்தார்கள். மொத்த 3 காவலர்கள் வந்தார்கள். யாரால் எடை போட்டு பார்க்கப்பட்டது, யாரால் தீ வைத்து பார்க்கப்பட்டது என்று நான் நேரில் பார்க்கவில்லை. அந்த சாக்கு பையில் எந்த எழுதியிருந்தது என்று நான் கவனிக்கவில்லை. ஆனால் எழுத்துக்கள் இருந்தது. என்ன எழுத்து என்று கவனிக்கவில்லை. 2021ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொரனா ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தது என்றால் சரிதான். அந்த நேரத்தில் ஒரு வீதியிலிருந்து மறு வீதிக்கு செல்வதற்கோ அல்லது வெளியூர் செல்வதற்கோ அரசிடம் டோக்கன் பெற்று தான் செல்ல முடியும். அந்த காலகட்டத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் கைப்பட எழுதினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. எந்த வகையான தராசு,எத்தனை எடை கற்கள் என்று நேரிடையாக நான் பார்க்கவில்லை. நான் சொல்வது போல் எந்த தகவலும் வரவில்லை என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யான தகவலை காவல் நிலையத்தில் சொல்லிவிட்டு பொய் வழக்கு போட நான் சாட்சியாகஇருந்துள்ளேன் என்றால்

சரியல்ல. பொட்டலங்கள் யாரால் போட்டோ எடுக்கப்பட்டது என்று நேரடியாக எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் சென்று குற்ற சம்பவம் கொடுத்த தகவலை எனது உயர் அதிகாரியான வருவாய் துறை அதிகாரிகளுக்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி தகவல் வாய்மொழியாக தெரிவித்தேன். வட்டாட்சியரிடம தகவல் தெரிவித்தேன். நான் அப்படி ஒரு தகவலை தெரிவிக்கவில்லை என்றும் உண்மையில் நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் எழுத்துப்பூர்வமாக தகவல் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி வீட்டிற்கு செல்லும்போது காலை 7.30 மணி இருக்கும். காவல் நிலையம் சென்று உதவியாளரிடம் தகவல் கொடுக்கும்போது காலை 8.30 மணி இருக்கும். நான் விஏஓ என்பதால் எனது ரப்பர் ஸ்டாம்பு சீல் வைத்திருப்பேன். நான் கொடுத்த புகாரில் ரப்பர் ஸ்டாம்பு வைக்கவில்லை. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவசரகதியாக சென்றதால் நான் ரப்பர் ஸ்டாம்பு கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் எதிரி எநத குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த தகவலுக்கும் சான்றுப்பொருட்களுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வாக்குமூலம் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையால் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்காக தவறுதலாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.